DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC.No. 143/2022 Crime No. Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-3- மணிகண்டன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 20.05.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தண்ணீர்பந்தல்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, போட்டோ ஸ்டுடியோ வைத்து நடத்தி வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை, கடந்த 2022 ஆம் வருடம், இருசப்பன் குடும்பத்தாருக்கும், தங்கராசு குடும்பத்தினருக்கும் தகராறு ஏற்பட்டதாகவும், அது குறித்து அவர்கள் போலீசில் புகார் அளித்துள்ளதாகவும், கேள்விப்பட்டேன். பிறகு ஒரு நாள் மதியம் நான் அந்த வழியாக சென்று கொண்டிருந்தபோது அங்கு வந்த போலீசார் சம்பவம் நடைபெற்ற இடத்தில் விசாரித்து படம் வரைந்து கொண்டிருந்தார்கள். என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நானும் சாட்சி கையப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து எந்த ஒரு பொருளையும் கைப்பற்றவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகாஜனில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நீங்கள் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதி இருக்கிறது என்ற விவரம் தெரியாது என்றால், சரிதான். நீங்கள் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால், சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.06.02 21:35:50 +0530